## செப்டம்பர் - 15- வெள்ளி
### தூய வியாகுல அன்னை
### “அவர் எனக்கு இரங்கினார்” 1 திமொ 1:13

**முதல் வாசகம் : 1திமோத்தி 1 : 1 - 2 12 - 14**

விசுவாச அடிப்படையில் என் உண்மையான பிள்ளை திமொத்தேயுவுக்கு நம் மீட்பராம் கடவுளும், நம்மை எதிர்நோக்குடன் வாழச் செய்யும் கிறிஸ்து இட்ட கட்டளையின்படி கிறிஸ்து இயேசுவின் திருத்தூதனான பவுல் எழுதுவது. தந்தையாம் கடவுளிடமிருந்தும், நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் இரக்கமும் அமைதியும் உரித்தாகுக! எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகின்றேன். ஏனெனில் நான் நம்பிக்கைக்குரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் திருத்தொண்டில் அமர்த்தினார்.முன்னர் நான் அவரை பழித்துரைத்தேன் துன்புறுத்தினேன் இழிவுபடுத்தினேன். ஆயினும் நம்பிக்கை கொண்டிராத நிலையில் நான் அவ்வாறு நடந்ததால், அவர் எனக்கு இரங்கினார்.இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் ஏற்படும் நம்பிக்கையோடும் அன்போடும் நம் ஆண்டவரின் அருள் அளவின்றிப் பெருகியது.

**பதில்பாடல் :** ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து

**நற்செய்தி : லூாக்கா 2 : 33 – 35**

அக்காலத்தில் குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அதன் தாயும் தந்தையும் வியப்புற்றனர். சிமியோன் அவர்களுக்கு ஆசிகூறி, அதன் தாயாகிய மரியாவை நோக்கி, ”இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்றார்.

**தியானம்:** இன்று திருச்சபை வியாகுல அன்னையின் திருநாளைக் கொண்டாடுகின்றது. கட்டளையை மீறியதால் பாவம் செய்த மனிதகுலம் மீது இறைவன் மனம் இரங்கி அவர்களை விடுவிக்க, வாழ்வின் வழிமுறைகளை கற்றுக் கொடுக்க தமது மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவரை இறை வடிவில் இல்லாமல் மனித வடிவில் அனுப்பினார். அவர் மனிதனாக பிறக்க ஒரு பெண் தேவைப்பட்டாள். அவர்தான் அன்னை மரியாள். இறைவனை சுமந்த முதல் நற்கருணைப் பேழை அவர். தமது வாழ்வில் மகிழ்ச்சியை விட வேதனையையும், சிரிப்பை விட கண்ணீரையும் சுமந்தவர். இறுதிவரை யேசுவிற்கு பக்க பலமாக நின்றவர். இன்று அவரை சிலர் இகழ்வதையும், இகழ்ச்சியாகப் பேசுவதையும் பார்க்கின்றபோது கண்ணீர் வருகின்றது. ஒருவர் இறக்கலாம், ஆனால் அவரின் வாழ்வும் அவர் செய்த நல்ல செயல்களும் என்றுமே அழியாதவை, அழிக்க முடியாதவை. யேசுவின் வரலாற்றுப் பாதையில் இருந்து அன்னை மரியாளை, அவரை தாங்கியவர் அவர் என்ற உண்மையை மறைக்க முடியுமா? அல்லது அழிக்கத்தான் முடியுமா? அவர் என்றுமே எமக்கு தாயாகவே உயர்ந்து நிற்கிறார். யார் அவரை தூற்றினாலும் நாம் அவரை மறக்கக் கூடாது. அவரின் தாழ்ச்சியை, தியாக வாழ்வை, மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றியதை நினைவில் கொள்வோம். சிலுவை அடியில் மனுக்குலத்திற்காக தம் மகனை கையளித்துவிட்டு நின்ற வியாகுல அன்னை எம்மையும் எமது குடும்பங்களையும் ஆசீர் வதிப்பாராக!